**சுவாமி கமலாத்மானந்தர்**
**தலைவர்**
**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**
**ரிசர்வ் லைன், மதுரை - 625 0 14.**
**போன் : 0452-2680 224, 2681 181**

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் உலகிற்கு வழங்கிய செய்தி

கணவன் வாழும் வாழ்க்கை மனைவிக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்க வேண்டும்; மனைவி வாழும் வாழ்க்கை கணவனுக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்க வேண்டும்.

இவ்விதம் கணவனால் மனைவிக்குப் புகழும், மனைவியால் கணவனுக்குப் புகழும் வரும் வகையில் அமையும் இல்லற வாழ்க்கையே மிகவும் சிறந்த இல்லற வாழ்க்கையாகும்.

இந்த உண்மை அருள் வாழ்க்கையில் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார் விஷயத்தில் அமைந்தது.

மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையில், பரமஹம்ச நிலையில், அனுபூதி நிலையில், குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்தார். அவரைப் போலவே மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையில், பரமஹம்ச நிலையில், அனுபூதி நிலையில், குருதேவியாராக அன்னை ஸ்ரீசாரதாதேவியும் வாழ்ந்தார்.

அன்னை ஸ்ரீசாரதாதேவியின் அருள்வாக்குகள் மிகவும் எளிமையானவை; சுலபமாக எல்லோராலும் புரிந்துகொள்ளக் கூடியவை; அன்றாட வாழ்க்கையில் அனைவராலும் கடைப்பிடிப்பதற்கு உரியவை; அவ்விதம் கடைப்பிடிப்பவர்களுக்குக் கட்டாயம் மிகவும் உயர்ந்த ஆன்மீக நன்மைகளை வழங்கக் கூடியவை.

'ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன?' -இந்தக் கேள்வியை நீங்கள் மற்றவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

உங்களுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பதிலைக் கூறுவார்கள். அவ்விதம் அவர்கள் கூறும் பதில்களும் ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்த்தால் சரியாகவும் இருக்கும்.

''ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு, அன்னை ஸ்ரீசாரதாதேவியார் தரும் பதில் என்ன தெரியுமா?

இதோ அவரது பதில்:

''ஆன்மீக வாழ்க்கை என்பது இறைவனின் பாதகமலங்களில் மனதை நிலைநிறுத்தி, எப்போதும் அவன் நினைவிலேயே மூழ்கி இருப்பதாகும்'' என்கிறார் நமது அன்னையார்.

இதன் மூலம் இறைவழிபாடு, ஜபம், தியானம், பிரார்த்தனை, சத்சங்கம், கடவுள் தொண்டு, அருள் நூல்களைப் படித்தல், மக்கள் தொண்டு, தியாகம்

போன்ற வகையில் நாம் நமது முழு வாழ்க்கையும் இறைவனுடன் தொடர்புபடுத்தி வாழ்வதுதான் விவேகமான வாழ்க்கை - என்பதை அறியலாம்.

கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம் நம் எல்லோருக்கும்தான் இருக்கிறது. ஆனால் அது மட்டும் போதாது. தெய்வ நம்பிக்கையோடு ஆன்மீக விழிப்பு பெற்றவர்களாகவும் நாம் வாழ்வது முற்றிலும் அவசியம். ''அது சரி, நீங்கள் குறிப்பிடும் அந்த ஆன்மீக விழிப்பை எப்படி பெறுவது?'' என்று கேட்கிறீர்களா? இதோ, உங்கள் கேள்விக்கு பதிலாக ஸ்ரீ அன்னையாரின் ஓர் உபதேசம் ஓடி வருகிறது பாருங்கள்:

''நறுமணம் கமழும் மலர்களைத் தொடுவதால் அதன் நறுமணத்தை நாம் உணர்வது போலவும், சந்தனத்தை அரைப்பதால் அதன் வாசனையை நாம் அறிவது போலவும், இறைவனை இடைவிடாமல் எப்போதும் நினைப்பதால் ஆன்மீக விழிப்பு ஏற்படும்'' என்கிறார் ஸ்ரீ அன்னையார்.

மனத்தூய்மையைப் பற்றி அவ்வப்போது நாம் பேசுகிறோம்; பலரும் பேசக் கேட்கிறோம்.

''இந்த மனத்தூய்மைக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? இந்த மனத்தூய்மையை எப்படி பெறுவது? அப்படியே சிரமப்பட்டு மனத்தூய்மையைப் பெற்றாலும் அதனால் எனக்கு என்ன லாபம்?'' என்று உலகப்பற்று கொண்டவர்கள் கேட்பார்கள்.

இவை போன்ற கேள்விகளுக்கு அன்னையாரிடமிருந்து நமக்கு இவ்விதம் பதில் கிடைக்கிறது:

''இறைவன் தூய்மை வடிவினன். ஆதலால் மனத்தூய்மை இல்லாமல் இறைவனைக் காண முடியாது. ஆன்மீக சாதனைகளின் மூலமாகவே மனதைத் தூய்மையாக்க முடியும்.

''ஜபம், தவம் போன்ற ஆன்மீக சாதனைகள் இல்லாமல் மனம் தூய்மை அடையாது. தூய மனதாலன்றி இறைவனை அறியவும் முடியாது.

''இறைவனின் திருநாமமாகிய மந்திரத்தைத் திரும்பத் திரும்ப ஜபம் செய்வதால் மனம் தூய்மை அடைகிறது. மனமே எல்லாம். மனம் தூய்மையானாலன்றி ஒரு நன்மையும் ஏற்படாது. தூய மனம் கொண்டவன் எல்லாவற்றையும் தூயதாகவே பார்ப்பான்'' என்கிறார் ஸ்ரீ அன்னையார்.

நல்லனவெல்லாம் தரும் ஒரு சிந்தாமணி உண்டு; கேட்டதையெல்லாம் தரும் ஒரு கற்பகமரம் உண்டு; விரும்பியதெல்லாம் தரும் ஒரு காமதேனு உண்டு. சிந்தாமணியும், கற்பகமரம், காமதேனுவும் ஒன்றாகச் சேர்ந்தது போன்ற ஒன்றும் மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும் வகையில் இருக்கிறது.

அது என்ன என்று அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறதல்லவா? அதுதான் இறைவனின் திருநாம ஜபம். இறைவனின் திருநாமத்தை ஜபம் செய்வது என்பது, எல்லோரும் பின்பற்றக்கூடிய மிகவும் சுலபமான ஓர் ஆன்மீக சாதனை. அதை 'ஜபயோகம்' என்றும் 'ஜப யக்ஞம்' என்றும் சொல்வார்கள்.

அன்னை ஸ்ரீசாரதாதேவியார் நாமஜபம் என்ற இந்த ஆன்மீக சாதனையை அடிக்கடியும் பெரிதும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அவர் கூறுகிறார் :

''ஜபம் மட்டும் செய்தால் போதும். இறைவனின் காட்சி தானாக வந்து சேரும். மேகத்தைக் காற்று கலைத்து விடுவதைப்போல, இறைவனின் நாமம் உலகப்பற்றாகிய மேகத்தைக் கலைத்துவிடுகிறது. இறைவனின் நாமத்தை மௌனமாக இருந்து ஜபம் செய்வது, வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குரிய சுலபமானதும் மேலானதுமான வழியாகும்.

''ஒருவன் நாள்தோறும் 15,000 முதல் 20,000 வரையில் இறைவன் பெயரை ஜபம் செய்தானானால் மனதை நிலைநிறுத்த மு டியும். இது முற்றிலும் உண்மை... நானே அதை உணர்ந்திருக்கிறேன். இந்த முறையை அவர்கள் கடைப்பிடிக்கட்டும். இந்த மு யற்சியில் தோல்வியடைந்தால், பிறகு என்னிடம் முறையிடலாம். இருபதாயிரம் எண்ணிக்கையாவது ஒருவன் தினம் ஜபம் செய்யாமல் உயர்ந்த பலன் எதுவும் கிடைக்காது.

''மனஒருமைப்பாட்டுடன் இரண்டு நிமிட நேரம் கடவுளிடம் பிரார்த்தனை செய்வதும், தியானம் செய்வதும், மனஒருமைப்பாடில்லாமல் பல மணி நேரங்கள் அவற்றைச் செய்வதைக் காட்டிலும் சிறந்தது'' என்கிறார் ஸ்ரீ அன்னையார்.

பக்தியின் மூலம் மனம் பக்குவம் அடைய அடைய- இறைவனின் பாதகமலங்களில் சரண் புகுவதுதான் மிகவும் உயர்ந்த ஆன்மீகநெறி என்ற உண்மை நம் உள்ளத்திற்குப் புலனாகிறது.

உலகியலின் விருப்பு - வெறுப்புகளால் நாம் அலைக்கழிக்கப்படாமல் இருந்து ஆன்மீக உயர்வு பெற வேண்டுமானால், இறைவனிடம் சரண் புகுந்து நாம் இறைவனின் பாதுகாப்பைப் பெற வேண்டும்.

சரணாகதியைப் பற்றி அன்னையார் கூறுகிறார் :

''கடவுளைச் சரணடைந்தவன்தான் காப்பாற்றப்படுவான்.

''ஒருவன் இறைவனிடம் சரண் புகுந்தால், தவிர்க்க முடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப்படுகின்றன. அத்தகைய மனிதனின் தலையெழுத்தை விதி என்ற தேவதைத் தனது கரங்களால் தானே துடைத்து விடுகிறது'' என்று ஸ்ரீ அன்னையார் கூறியிருக்கிறார்.

★★★★